**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்திவெளியீடு**

**செ.வெ.எண்.391 நாள் : 19.11.2025**

**உலக கழிப்பறை தினத்தினை முன்னிட்டு சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறப்பு அஞ்சல் தலையினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (19.11.2025) வெளியிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் சுகாதாரத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஆண்டுதோறும் நவம்பர் 19ஆம் தேதி உலக கழிப்பறை தினமாக அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதி மக்களிடையே சுத்தம் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் சிறப்பு அஞ்சல் தலையினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (19.11.2025) வெளியிட்டார்.

5 ரூபாய்க்கான இந்த அஞ்சல் தலையில் ஆண், பெண், மாற்றுத்திறனாளி, மூன்றாம் பாலினத்தவர் படங்களுடன் Clean Sanitation For All - World Toilet Day 2025 (அனைவருக்குமான சுத்தம் சுகாதாரம் - உலக கழிவறை தினம் 2025) என்கிற வாசகங்களுடன் அமைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கழிவறை வளாகத்தில் கட்டணமில்லா பகுதி என்பதை குறிக்கும் வகையில் No Fee Zone என்கிற வாசகத்துடன் கூடிய விளம்பரப் பலகை, சுகாதாரப் பணியாளர்கள் அணிந்து கொள்ளும் பேட்ஜ் மற்றும் ஸ்டிக்கர்களை மாண்புமிகு மேயர் அவர்கள் வெளியிட்டு வழங்கினார்.

மேலும், சுகாதாரப் பணியாளர்களுக்கு சீருடை, கையுறை, முகக்கவசம், தண்ணீர் குடுவை (Stainless Steel Water Bottle) அடங்கிய பாதுகாப்பு உபகரண தொகுப்புகளை வழங்கினார்.

முன்னதாக, மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் உலக கழிப்பறை தின உறுதிமொழியினை அலுவலர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., நிலைக் குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**